செ.வெ.எண்: 37/பிப்ரவரி நாள் : 19.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**இராமேஸ்வரம் தமிழ்நாடு ஓட்டலில் பழைய மின்சார சாதனங்கள், அலுமினிய பொருட்கள் மற்றும் மரப் பொருட்கள் 08.03.2016 அன்று பொது ஏலம் விடப்படவுள்ளது**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

ஓட்டல் தமிழ்நாடு, இராமேஸ்வரத்திற்கு சொந்தமான பழைய மின்சார சாதனங்கள், அலுமினிய பொருட்கள், பழைய விறகு மற்றும் மரப்பொருட்கள் வரும் **08.03.2016** அன்று காலை **12.00** மணியளவில் இராமேஸ்வரம் ஓட்டல் தமிழ்நாட்டில் வைத்து ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலம் விடப்படுகிறது.

விவரங்களடங்கிய ஒப்பந்த படிவம் ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) மற்றும் வரி செலுத்தி இவ்வலுவலக வேலை நாட்களில் 20.02.2016 முதல் 06.03.2016 மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். (இந்த பணம் திருப்பித் தரமாட்டாது)

டெண்டரில் கலந்து கொள்பவர் பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் பாரமுடன் ரூ.10,000/- த்திற்கான வரைவோலை இணைத்து அனுப்ப வேண்டும் மற்றும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) (08.03.2016 காலை 11.30 மணி வரைக்குள்) முன்பணமாக செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம்

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**